விலை: 1 ரூபா

# உதயசூரியன்

UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1, திருவள்ளுவராண்டு 2011, 14—11—80, வெள்ளிக்கிழமை, ஒளி—7

கட்டணம்
இலங்கை
ஒரு ஆண்டு 60-00
அரை ஆண்டு 30-00
இந்தியா
ஒரு ஆண்டு 75-00
ஏனைய நாடுகள்
ஒரு ஆண்டு
15 அமெரிக்க டொலர்

UNIVERSITY OF SRI LANKA ... CAMPUS LIBRARY
RECEIVED
1980-12-1
PERIODICALS DIVISION

## இராணுவத்தின் துப்பாக்கிகள்

## தமிழ்ஈழத்தை ஆளும்வரை

# இங்கே அமைதி நிலவாது!



### வரவு செலவுத்திட்ட விவாதத்தில் தமிழர் தலைவரின் தழல் உரை

தளப்பம அற்ற அரசியல் உறுதிநிலை (POLITICAL STABILITY) இலங்கையில் ஏற்பட்டிருப்பதாக நிதி அமைச்சர் தனது வரவு செலவுந் திட்டச் சொற்பொழிவில் கூறினர் நான் அவரது கூற்றை முற்றாக மறுக்கின்றேன். இராணுவத்தின் துப்பாக்கிமுனையில் தமிழ் இனத்தை நீங்கள் அடக்கி ஆள்கின்ற வரை தமிழ் ஈழத்தின் இறைமையும் சுதந்திரமும் நிலைநாட்டப்படும்வரை இலங்கைத் தீவில் தளப்பம்மற்ற அரசியல் உறுதிநிலை ஏற்படாது, என்று வரவு செலவுத்திட்ட உரையின் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் எதிர்க் கட்சி முதல்வர் அமிர் அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் —நான் எதிர்க்கட்சி சார்பில் மாத்திரமன்றி தமிழ் மக்கள் சார்பிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பிலும் கருத்துக்களைக் கூற வேண்டியவனாய் இருக்கின்றேன்

தமிழ் மக்கள் தங்கள் பிரச்சனைக்கு நிலையான ஒரு தீர்வை எதிர் பார்க்கின்றார்கள். ஆனால் இது குறித்து அரசு எதுவும் செய்ய முன்வரவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஆறுமாதகாலம் அவசரகால நிலைமை அமுலில் இருந்தபோது ஏழு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டனர். அங்கு இராணுவ முற்றுகை இன்னமும் இருந்து வருகின்றது. அங்குள்ள அசினர் விடுதிப்பகுதியில் இப்பொழுதும் இராணுவத் தளம் இருக்கின்றது. இதுஇராணுவம் முற்றுகையிட்டிருப் பதையே காட்டுகின்றது.

நாடு முழுவதும்ஒருமகிழ்ச்சியற்ற நிலைமையே காணப்படுகின்றது. பொருளாதாரக் கஷ்டம் காரணமாக சம்பள உயர்வுகோரி வேலைநிறுத்தம் செய்தவர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டீர்கள் அரசாங்கப் புள்ளி விபரத்தின்படி நாற்பதாயிரம் பேர் இவ்விதம் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தொழிற் சங்கங்களின் கணிப்பின்படி ஒருலட்சம்பேர் வேலை இழந்திருக்கிறார்கள். மொத்தம் சுமார்இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் வீதிகளில் விடப்பட்டிருக்கிறார்கள். முந்நூறு ரூபாய் சம்பள உயர்வு கேட்டு தம்உரிமையைப்பாவித்து வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு கல்லடி கொடுத்து வீட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள் என்று குறிப்பிட்ட எதிர்க்கட்சிமுதல்வர் எம்மைப் பொறுத்தவரை ஒடுக்கப்பட்ட— அடக்கப்பட்ட மக்களுக்காகவும் நீதிக்

(8-ஆம் பக்கம் பார்க்க)

## உலகம் சுற்றும் அமைச்சர்

அதி உத்தம ஜனாதிபதி ஜே ஆர். அரசாங்கத்தில்ஓர் அமைச்சர் இருக்கிலறார்— அயல்நாட்டு விவகாரங்களுக்கு அவர் தான் பொறுப்பு—பெயர் சொல்லத் தேவையில்லை— அவ்வளவு பிரபல்யம்! எப்படித் தெரியுமா?

1977ம் ஆண்டு ஆடிப்பொதுத் தேர்தலில் ஐ தே.க. அரசு அமைந்ததிலிருந்து இன்றுவரைஇந்த அமைச்சர்— ஐம்பத்து மூன்றுதடவை அகிலஉலகமும் சுற்றிவந்திருக்கிறார்.

ஆமாம்—இவர் ஓர் உலகம் தாவும் மந்தி......ரி!

பொது மக்கள் பணம் எப்படியெல்லாம் பாழாகின்றது— பார்த்தீர்களா!

தகவல்— 'தேஷன்'

## தமிழீழப் பிரகடனம் ஒரு

# தனி நபர் தீர்மானம்

### லண்டன் ஈழவிடுதலை இயக்கம் அறிக்கை!

1982ம் ஆண்டு தைப்பொங்கல், நாளில் லண்டனில் இயங்கும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் தமிழ் ஈழப் பிரகடனம் செய்யவிருப்பதாக அதன் அழைப்பாளர் திரு கிருஷ்ணவைகுந்தவாசன் அண்மையில் அறிவித்திருந்தார்.

ஆனல் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஓர் அங்கமாக விளங்கும் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் திரு.என.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் அத்தீர்மானம் பற்றி தங்கள் இயக்கத்தினருக்கு எதுமே தெரியாது என்று உதய சூரியனுக்குத் தெரிவித்துள்ளார். அவர் எழுதிய கடிதத்தை அப்படியே வாசகர் முன் வைக்கிறோம்!

1982ம் ஆண்டு பொங்கல் தினத்தன்று தமிழீழத்தின் புதிய அரசுஉதயமாகப்போகிறது என்று லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் திரு. கிருஷ்ண வைகுந்தவாசன் ஒரு பிரகடன அறிக்கை வெளியிட்டிருந்தார். பிரச்சினைக்குரிய இப்பிரகடனம் தமிழீழஅரசியல் அரங்கில்சூடான விவாதத்தை எழுப்பிஇருப்பதுடன்பொதுமக்கள் மனதில்பெரும்குழப்பத்தையும்உண்டுபண்ணியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழர் ஒருங்கிணைப்

(8—ஆம் பக்கம் பார்க்க)

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

# தலைவர் அமிர் தலைமைக்கு தலைவணங்குகிறோம்!




பறவைகளே! பறவைகளே!

கூட்டணி மீது என்ன குற்றங்களைச் சுமத்தலாம் என்று ஆராய ஒரு கூட்டம் இப்போது புறப்பட்டிருக்கிறது,

முழுநிலவில் உள்ள கறுப்புப் புள்ளியைப் பார்த்து —அதோ கறுப்பு கறுப்பு என்று கருதுகிறவர்கள் மூன்று நான்கு பேர் முளைத்திருக்கிறார்கள்.

இருக்கிற புள்ளியைப் பார்த்துச் சத்தம்போடுகிறவனைக் கூட நான் மன்னிப்பேன்—ஆனால் இல்லாதபுள்ளியை வைத்து யுத்தம் போடுகிறவனை என்னால் ஜீரணிக்கமுடியாது.

சரி பிழை ஆராயாமலே கோவணத்தைக் கட்டிக் கொண்டு இவன் சண்டைக்கு வருகிறான்.

தன்னுடைய பணியை உயர்த்திக் காட்டுவதற்காக —இந்தக் கூட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தாழ்த்திக் காட்டுகிறது.

,'பாராளுமன்ற அரசியல் நடத்தும் கூட்டணி போராடும் இயக்கம் ஆகுமா?,,என்று பாய்ந்து விழுந்து ஒருவன் வசைபாடுகிறான்.

இப்படிக் கூறுவதால் அடுத்தவர்கள் தன்னைப் பெரிய விடுதலை வீரனாக மதிப்பார்கள் என்பது இந்த ஜீவராசியின் கணக்கு.

பறவைகளே! பறவைகளே! எமது இயக்கம் பாராளுமன்றத்தில் பங்கு கொள்வதற்கு எமது இயக்கம் ஒரு நியாயம்வைத்திருக்கிறது.

அந்த இடத்தை எங்கள் விடுதலைப் பிரசாரத்துக்கான ஒரு மேடையாகப் பயன்படுத்துகிறோம் என்பதே அந்தநியாயமாகும்.

என்னைப் பொறுத்தவரை—பாராளுமன்றத்தை எங்கள் விடுதலைக்காய் பயன்படுத்த வேண்டும் என்பதால் பாராளுமன்றம் நமக்கு அவசியம் என்று நான் கருதவில்லை— சிங்கள ஏகாதிபத்தியம் நம் விடுதலையை நசுக்குவதற்கு நமது பாராளுமன்றத் தொகுதிகளை பயன் படுத்துவதைத் தடுக்க வேண்டும் என்பதால் பாராளுமன்றம் நமக்கு அவசியம்என்கிறேன்.

அவனுடைய கோட்டை நம்முடைய தாயகத்துக்கு பயன்பட வேண்டும் என்று நான் அதிகம் கவலை கொள்ளவில்லை—நம்முடைய தாயகம் அவனுடைய கோட்டையாகப் பயன் படக்கூடாது என்றே நான் கவலை கொள்கிறேன்.

போன தேர்தல்களில் நாம் தோற்றதொகுதிகளைக்கைப் பற்றிய சிங்கள ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகள்போட்ட கூத்துக்களை நாம் மறப்பதற்கில்லை.

தந்தை செல்வாவும் தலைவர் வன்னியரும் தமிழ்ஈழவிடுதலைப் போரைத்துவங்கிய காலத்தில் உறுப்பினர்களாய் நாடாளுமன்ற உறுப்பினர்களாய் யாழ்ப்பாணத்தில்நடேசனும் குமாரசாமியும் மட்டக்கப்பில் நல்லையாவும் எதிர்மனசிங்கம் தந்த தொல்லைகளை நாம் அறிவோம்.

சிங்களச் சிறைச்சாலைகளில் நம் இளைஞர்களுக்குபுழுநெளியும் ரொட்டித் துண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் வைப்பாட்டி சிறிமா அம்மையாரை தமிழ் ஈழத்தின்பந்தலில் இருத்தி தேனும் பாலும் கொடுத்தபாராளுமன்ற உறுப்பினர்களான தியாகராசா அருளம்பலம் ராஜன் செல்வநாயகம் ஆகியோரைச் சிந்தியுங்கள்.

நமது தலைவர்கள் தமிழ நிலத்தைக் காப்பாற்ற அபிவிருத்திச் சபையை எப்படிப் பயன் படுத்தலாம் என்று சிந்திக்கிற நேரத்தில்—சிங்கள ஏகாதிபத்தியத்தின்கையாட்களாக நின்று—மட்டக்களப்பிலும் கல்குடாவிலும் சிங்கள மீனவர்களுக்கு நன்னூறு வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ள தேவநாயகத்தை ராஜதுரையை பாராளுமன்ற உறுப்பினர்களாகத்தான் நாம் பார்க்கிறோம்

பறவைகளே! பறவைகளே! தமிழ்ஈழத்தின்மூன்றுநான்கு பாராளுமன்றத் தொகுதிகளை பறிகொடுத்ததால் நமக்கு தலைசுற்றுகிறது—தமிழ்ஈழத்தின் முழுத்தொகுதிகளையும் பறிகொடுத்தால் நமக்குத் தலை வெடிக்காதா—சிந்தியுங்கள்

தற்போதுள்ள சூழ்நிலையில் நாம் பாராளுமன்றத்தை தவிர்ப்போமானால்—தமிழ் ஈழத்தின் பிரதிநிதி ஆகிறவர்களைக் கொண்டே தமிழ் ஈழத்தின் தலையில் மண்போட்டவர்கள் ஆவோம்.

மூன்று பேராக இருக்கிறதுரோகிகள்—முழுத் தொகுதிகளிலுமாக—முப்பது துரோகிகள் ஆவார்கள்,

பாராளுமன்றத் தொகுதிகள் அனைத்திலு மந்திரிமார்களுக்கு பந்தல் போடப்படும்—பன்னீர் தெளிக்கப்படும்,

முப்பது பாராளுமன்றத் துரோகிகளும் விமானத்தில் முழு உலகமும் சுற்றி—'' நாங்கள்தான் தமிழ்ஈழத்தின் பிரதிநிதிகள் —எங்களுக்கு தனி அரசுவேண்டாம்!;என்று முழங்கி —நாடு திரும்பியதும் முப்பது உருப்படியான எலும்புத் துண்டுகளைப்பரிசு பெறுவார்கள்.

பாராளுமன்றத்தை தமிழ்ஈழசார்புப் பிரசாரம் நிகழ்த்தும் மேடையாக நாம் பயன்படுத்தும் நிலைமாறி—தமிழ்ஈழத்தை சிங்கள ஏகாதிபத்திய ஆதரவுப் பிரசாரம் நிகழ்த்தும் மேடையாக அவர்கள் பயன்படுத்தும் நிலை பிறக்கும்.

பறவைகளே! பறவைகளே!

கவனமாக இந்த நிலைகளையெல்லாம் ஆராய்ந்துதான் கட்டம் கட்டமாக நாம் நடத்தும் போராட்டம்—கடைசிப் போராட்டமாகக் கனிகின்றவரை—நமது காலடிகளை நிதானமாக வைக்க வேண்டும் என்று நாம் கணக்குப் போட்டிருக்கிறோம்.

பாராளுமன்றத்தைத் தூக்கி எறிவது சின்ன விஷயம் —ஆனால் பாராளுமன்றத்தைத் தூக்கி எறிந்த பின் நம்மை நோக்கி இருப்பது பெரிய விஷயம்!

பறவைகளே! பறவைகளே!

எதிரியின் களத்தைநோக்கி நாம்முன்னேறுவதுஒன்று— எதிரி நம்முடைய தளத்தை நோக்கி முன்னேறாமல் தடுப்பது ஒன்று— இந்தப் போர்த்தந்திரம் நமக்கு இன்றியமையாத ஒன்று,

பாராளுமன்றப்பதவியாக இருந்தாலும்சரி— உள்ளூர் ஆட்சிமன்றப் பீடமாக இருந்தாலும் சரி— அபிவிருத்திசபை ஆசனமாக இருந்தாலும்சரி—நமது மண்ணின் தளங்களை நமது கையிலேயே வைத்திருக்க வேண்டியது நமது பாரிய கடமையாகும்.

அனுபவத்தில் இந்த உண்மைகள் பளிச்சிட்டதாலேயே அயர்லாந்தும் வங்காள தேசமும்—அவைபோன்ற இன்னும் பல விடுதலைப்போர் நிகழ்த்திய நாடுகளும்— போராடிய காலத்திலேயே பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்தன.

சுயநலத்துக்காக அல்ல— தமிழ் நிலத்துக்காக— அந்நியனின் பாராளுமன்றத்துக்குள் நாம் 'சும்மா' ஆவது உட்கார வேண்டியிருக்கிறது.

வாதம் செய்ய வேண்டும் என்பதற்காக வாதம் செய்கிறவன் வாதம் செய்து கொண்டே இருப்பான்.

நாம் உண்மைகளின் நடுவில் நிற்போம்!

பாராளுமன்றம் என்ன—ஒரு துரும்பும் விடுதலைக்குப் பயன்படும் என்றால் அதைப்பயன் படுத்துவது சரியே!

வாருங்கள்!

அனுபவக் காற்றில் உங்கள் இறக்கைகள் அசைவதாக.

கவிஞர்
காசி ஆனந்தன்

புதுவை மாநில தமிழ் ஈழத் தோழமைக் கழகத் தலைவர் திரு மூ. வேந்தன் அவர்கள் உதயசூரியனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது—

திரு. வைகுந்தவாசன் அவர்களின் முறையற்ற புதுவை வருகையைப் பற்றி திரு அரு கோபாலன் அவர்கட்கு எழுதிய கடிதத்திலே தலைவர் அமிர் அண்ணன் அவர்களின் தலைமைக்கு விரோதமாகச் செயல் படுவதாகச் சந்தேகப்படுவதாகவும் இதைத் தெரிந்து எனக்கு எழுத வேண்டுமாயும் நான் எழுதியிருந்தேன்.

நான் சந்தேகப்பட்டது உண்மை என்பது 'உதயசூரியன்' மூன்றாவது இதழில் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் பறவைகளே பறவைகளே! என்ற பகுதியில் திரு வைகுந்தவாசனின் தலைமைக்குக் கட்டுப்படாத— சுய விளம்பர போக்கை விளக்கி எழுதியுள்ளதைப் படித்து நானும் இங்குள்ள உண்மைத் தோழர்களும் புரிந்து கொண்டோம்.


## புதுவை வேந்தன் கடிதம்

'இன்னொருவன் வளர்வதற்காகவோ பெரியமனிதன் ஆவதற்காகவோ நான் இயக்கம் வைத்துக் கொண்டிருக்கவில்லை. தமிழ்ச் சமுதாயம் வளர்வதற்காகத்தான் இயக்கம் வைத்துள்ளேன்' என்று தலைமைக்குக் கட்டுப்படாத சுயவிளம்பரக்காரர்கட்கு தந்தை பெரியார் கூறியகருத்தை நினைவுபடுத்தி தமிழ்ஈழ விடுதலைக்காகப் போராடும் மதிநுட்பம் வாய்ந்த தலைவர் அமிர் அண்ணன் அவர்களின் தலைமையைப்புதுவையிலுள்ள தமிழர்கள் என்றும் ஆதரிப்பார்கள் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு - உதயசூரியனுக்கு எழுதிய கடிதத்தில் திரு மு. வேந்தன் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார்.

## த. வி. கூ. கிளைக் கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பருத்தித்துறைத் தொகுதிக் கிளைக்கூட்டம் 23-11-80 ஞாயிறு காலை 9 மணிக்கு செம்பியன்பற்று இறக்கத்தில் நடைபெறும் என, தொகுதிக் கிளைச் செயலாளர் திரு. கே, கிருஷ்ணசிங்கம் அறிவிக்கின்றார்,



# இலட்சிய இதயங்களோடு..

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்—

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆட்சித்தலைவர்களுக்குத் தமிழ் மறை வகுத்த அற வழி இதுவாகும். மன்னர்களுக்கும் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் மக்கள் தலைவர்களுக்கும் மாத்திரமின்றி எவ்வித அமைப்பிலும் தலைமைப் பொறுப்பில் இருப்போருக்கு இந்த அறிவுரை பொருந்தும். அரசனுடைய சபையிலே தவறுகளைச் செவிகைப்ப எடுத்துக் கூறக்கூடியமதி மந்திரிமார் அவசியம் என்பதை அரசியல் அரிச்சுவடியை அறிந்தோரும் புரிந்திருப்பர். இந்த உண்மையை எனது முப்பத்திரண்டு வருட அரசியல் அனுபவத்தில் நான் நன்கு அறிந்திருக்கின்றேன். ஒரு சாதாரண தொண்டனாக இளைஞர் இயக்கத் தலைவனாக பாராளுமன்ற உறுப்பினராகத் தலைவர் தந்தை செல்வாவின் கருத்தை ஏற்காது எத்தனையோ தடவை வாதிட்டிருக்கின்றேன்.

1957ம் ஆண்டு பண்டா— செல்வா ஒப்பந்தம் கையெழுத்தானபோது இளமைத் துடிப்பில், மட்டக்களப்பு விஷயாலோசனைக் குழுவில் ஓர் இரவு முழுவதுமே ஒப்பந்தத்தை எதிர்த்து வாதிட்டேன். தலைவர் தந்தை செல்வா, அமரர் வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோர் எத்தனையோ விளக்கங்களை அளித்தனர். இறுதியில் அனுபவம் மிக்க தலைவர்களின் கருத்தை விஷயாலோசனைக்குழு ஏற்றுக்கொண்டவுடன் அம்முடிவை என் முடிவாக ஏற்றுக்கொண்டேன், அன்றியும் தந்தையின் கட்டளைப்படி ஒப்பந்தத்தை ஏற்பதென்ற விஷயாலோசனைக் குழுவின் தீர்மானத்தை அடுத்த நாள் மட்டக்களப்பு மகாநாட்டில் நானே முன்மொழிந்தேன். ஒப்பந்தத்தைச் சாட்டாக வைத்துத் தலைமையையும் கட்சியையும் தாக்கிய மாற்றாருக்கு ஏற்ற பதில் வழங்கும் பொறுப்பையும் ஏற்றுப்பணி புரிந்தேன்.

இயக்கத்தில் பற்றுள்ள ஒரு தொண்டன் செய்ய வேண்டியது இதுதான். எந்த விடயத்திலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்துண்டு. தத்தம கருத்தை முன்வைத்து வாதாட வேண்டியது ஒவ்வொரு உறுப்பினரதும் கடமையாகும். அது அவர்களது உரிமையும்கூட. ஆனால் இயக்கத்தின் பொறுப்புவாய்ந்த சபை ஒரு முடிவுக்கு வந்தபின் அந்த முடிவையே தன் கருத்தாக ஏற்றுச் செயற்படவேண்டியது இயக்க உறுப்பினரின் கடமையாகும், முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா என்று தற்பெருமையால்தான் படித்த பிடியையே நிலை நாட்ட முற்படுபவர் இயக்கத்தில் ஏனையோருடன் சேர்ந்து உழைக்கத் தகுதியற்றவர்கள 1948ம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கத்தோடு சேர முடிவெடுத்தபோது அம்முடிவு தந்தை செல்வாவுக்கு உடன்பாடானதன்று எனினும் கட்சியின் ஒற்றுமை கருதி அதை ஏற்றுயாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த கூட்டத்திலும் பேசினர், பன் மலைநாட்டுத் தமிழரின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டம் வந்தபோது அதை எதிர்த்தார், காங்கிரசுக்கு வெளியே சென்று புது இயக்கத்தை ஆரம்பித்தார். தன்மனச்சாட்சியின்படி தான் ஏற்றுக் கொள்ள முடியாத ஓர் தீர்மானத்தை இயக்கம் எடுத்தால் வெளியே சென்று தன் கருத்தை முன் வைத்து ஓர் இயக்கத்தை ஆரம்பிப்பதில் எவ்வித தவறுமில்லை.

இன்று தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மாறுகப் பிரசாரஞ் செய்யும் சிலர் தந்தையின் செயலை முன்மாதிரியாகக் காட்டுகின்றனர். ஆனால் தந்தையின் தலைமையோடு முரண்பட்டு 1968ம் ஆண்டு கட்சியைவிட்டு வெளியேறிய திரு. நவரத்தினத்தை எண்ணிப்பார்க்கத் தவறிவிடுகின்றனர். டட்லி—செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட சபைகளை நிறுவச் செய்வதற்காக அரசாங்கத்தோடு ஒத்துழைக்கும் கொள்கையை— அரசாங்கப் பாராளுமன்றக் குழுவிலே அங்கமாக இருக்கும் கொள்கையைக் கொண்டிருந்தார் தந்தை செல்வா. அடையாள அட்டைச் சட்டப் வந்தபோது அதை எதிர்க்க வேண்டுமென்று கூறினர் திரு. நவரத்தினம். சில திருத்தங்களைச் செய்தபின் அச்சட்டத்தை ஆதரிப்பதற்குத் தந்தையின் வழி நடத்தலின் கீழ் கட்சி தீர்மானித்தது. மீறினர் திரு நவரத்தினம் நாய்பட்டி போல அட்டையைக் கழுத்தில் தமிழ் மக்கள் கட்ட வேண்டிவரும் என்று வாதாடினர். அப்படியான விளைவுகள் வரமாட்டா என்றார் தந்தை வெளியே சென்று புதுக்கட்சியை ஆரம்பித்தார் திரு. நவரத்தினம் தந்தை செல்வாவின் நிலையை மக்களும் ஏற்றுக் கொண்டனர், பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னும் தமிழ மக்கள் அடையாள அட்டையைக் கட்டும் நிலை ஏற்படவில்லை. சிங்களமக்களே தம் தேவைகள் பலவற்றுக்கு அடையாள அட்டைகளைப்பயன்படுத்தும் நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து மோதலினால் திரு. நவரத்தினத்தையும் நல்ல இலட்சிய இதயங்கள் சிலவற்றையும் நாம் இழந்ததுதான் கண்ட பலன். கருத்து மோதலை வெடிக்கும் அளவிற்கு வளர்க்காமல் கட்சிகுள்ளேயே வைத்திருந்தால் திரு. நவரத்தினத்தினதும் அவருடன் வெளியேறிய தொண்டர்களினதும உழைப்பு இயக்கத்திற்குப் பயன்பட்டிருக்கும.

தமிழ் இனம் செல்வம மிகுந்த ஓரினமல்ல. தமது முழு நேரத்தை இனவிடுதலைப் பணியில செலவிடக்கூடியவர்களும சிலரே உளர். அப்படியான சிலரின உழைப்பும செல்வமும் எமக்கிடையே போராட்டங்கள நடத்துவதில விரயமானல் ஆட்சியாளரின பலத்தை எதிர்த்து நாம வெற்றி காண முடியுமா? சென்ற சிலமாதங்களாக எமது இயக்கத்தினர் சிலரின செயலால எமது சக்தியும நேரமும, செல்வமும எவ்வளவு உட்பூசலில் விரயமாகின்றன என்பதை இலட்சிய இதயங்கள எண்ணிப்பார்க்க வேண்டாமா?

ஆட்சியாளரோடு மோதுவதற்கு— இயக்கத்தில் இருந்தபோது—பயன்படுத்தாத சக்திகளை எல்லாம— தந்திரங்களை எல்லாம் எம்மோடு மோதுவதற்குப் பயன்படுத்துகின்றனர். எமது கருத்தைமக்கள் முன் வைக்க ஓர் ஏடு இல்லாத காரணத்தினல் உதயசூரியனை இதழை ஆரம்பித்தோம். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் அப்பெயரில் ஓர் பத்திரிகை நடத்தி செத்தொழிந்த இதழின் உரிமையாளரைத் தேடிப்பிடித்து அதற்கு மீண்டும் உயிர் கொடுத்து எமது மக்கள் மத்தியில் குழப்பத்தை அதிகரிக்கப்பார்க்கின்றனர். இயக்கத்தின் கருத்தை எடுத்துக்கூற ஒரு துணை ஏடாக அந்த இதழை முன்புநடத்த இந்தத் தம்பிமார் எண்ணவில்லை. ஆட்சியாளரோடு மோதுவதற்கு ஓர் ஏட்டை ஆரம்பிக்க யாரும் எண்ணவில்லை. எம் மாடுமே தஎத்தனை ஏடுகளை ஆரம்பிக்கின்றனர் என்னையும் ஏனைய தலைவர்களையும் திட்டுவதென்றால் சுலபம்தானே. யாரும் திட்டலாம். அதற்கு ஏடு ஆரம்பித்தால் பொலீஸ்காரன் வரமாட்டான் வேறு யாரோ பொறுப்பு என்று கூறி அறையைப் பூட்டிக்கொண்டிருக்கும் வீரச்செயலைச் செய்யவேண்டியிராது. ஆனல் இச்சஏடுகளையும், இவற்றால் குழப்பமடையும் தமிழ்மக்களையும் பார்த்துச்சிரிப்பவர் ஆட்சியாளர்களே. அவர்களுக்குத்தான் கொண்டாட்டம். தமிழ் இனத்தினுடைய குறைவான செல்வமும் சில உழைப்பாளிகளின் சக்தியும் தம்முள்ஒருவர்மீது ஒருவர்சேறுவாரிஇறைப்பதில் விரயமானல் அவ்வளவுக்கு ஆளுவோருக்கு ஆறுதல்தானே.

என்னையும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையும் திட்டுவதோடு நின்று விடுவார்கள் என்று நினைத்தேன் தமது வாழ்நாளில் பல ஆண்டுகளை இனத்துக்காகச் சிறையில் செலவிட்ட தியாகச் சுடர்கள்மீதும்—தம்பிகள்காசிஆனந்தன்'வண்ணை ஆனந்தன்,மாவை சேனுதிராசா போன்ருேர் மீதும்— நஞ்சை உமிழத் தந்தை செல்வா ஆரம்பித்தஏடே பயன் படுத்தப்படுவதைப் பார்த்து வேதனையால் துவளாத இலட்சிய இதயங்கள் இருக்க முடியாது.எங்கே செல்கிறோம்—யாரைத்தாக்குகிறோம் என்பதையேஉணராது—தந்தையை எதிர்த்துப போட்டியிட்டு நேற்று இயக்கத்திற்கு வந்தவர்களைத்தூக்கி—தந்தையையும் அவர் ஏட்டையும் தாங்கி நின்ற தொண்டர்களைத் தாக்கி கூட்டணிக்கு யார் விரோதிகளோ அவர்கள் எங்கள் நண்பர்கள என்ற தோரணையில அவர்கள் எல்லோர் கருத்தையுயஉயர்த்தி—துறையப்ப வுக்கு அஞ்சலி செலுத்தும நிலைக்கு எமமவர்கள் சிலர் செல்லவேண்டுமா ''விதியே,விதியே தமிழச் சாதியை நீ என்ன செய்ய நினைத்தாய்?'' என்று பாரதியோடு கேட்கத் தோன்றுகிறது இந்த விதமாக ஆத்திரத்தில் அறிவிழந்து நடப்பாரைத் திருத்தும் பணியில் இலட்சிய இதயங்கள் முழுச் சக்தியையும் பயன் படுத்த வேண்டாமா?

## வேதனை உள்ளத்தில் வேலாகப் பாய்கின்றது!

★

**அண்ணன் அமிர்**

# ஒரு புறம் சிரிப்பு மறு புறம் நெருப்பு

**1977**ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐந்நூறு வாக்கு அதிஸ்ரத்தால் அமைச்சரான திரு. கே. டபிள்யூ தேவநாயகம் அவர்கள்—அண்மையில் கற்குடாவில் நடந்த ஒரு வைபவத்தில் அவரது சாதனை என ஒன்றைச் சொல்லிச் சந்தோஷப்பட்டிருக்கின்றார்.

எனது தொகுதியில் எழுநூறு பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளேன்.

இதுதான் அந்தச் சாதனை—இதய மகிழ்ச்சி நமக்கெல்லாம் ஏற்படுகிறது.

வயதுவந்த— தமக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் தகுதிவாய்ந்த - அதுவும் கல்வித் தராதர இதழையே கையில் வைத்துக் கொண்டிருக்கும் இளைஞர்கள்—இளைஞிகள் வேலைவாய்ப்பின்றி வெம்பிக் கொண்டிருப்பார்களேயானால்—அதைவிட இழிவு அவர்கள் வாழும் நாட்டிற்கு வேறில்லை!

துரதிஷ்டவசமாக — தொடர்ந்து பலஆண்டுகளாகசிறிலங்கா அரசின் சிறைக்கூடமாக விளங்கும் தமிழீழத்து இளந் தலைமுறையினர் வேலை வாய்ப்பின்றி விடும் வேதனைப் பெருமூச்சு வீட்டுக்கு வீடு வெடித்துக்கிளம்பிக்கொண்டிருக்கிறது,

இந்தச்சூழ்நிலையில்—எனது தொகுதியில் எழுநூறுபேருக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளேன் என அறிவித்திருக்கின்றார் அமைச்சர் பெருமான் அவர்கள்!

அறிவிப்பு உண்மையானல் அது ஆனந்தத்தேன்தான்—ஆனல்—

எந்த அளவு கோலைக் கொண்டு இந்த வேலை வாய்ப்பை அமைச்சர் வழங்கியிருக்கின்றார் என்று கேட்க விரும்புகின்றோம்!

ஒரு இளைஞனுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் கல்வித் தராதரமே முக்கிய கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுமானல்—

கற்குடாத் தொகுதியில் கல்விப் பொதுத்தராதரத் (உயர்தரம்) தேர்வில் சித்தியடைந்தோர் வேலை வாய்ப்பின்றி கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் போது—

கல்விப் பொதுத்தராதர (சாதாரணம்)த் தேர்வுபற்றிக் கூட அறியாதோர் அரசாங்கஉத்தியோகத்தர்களாகப் பவனி வருகின்றார்களே எப்படி?

பட்டிருப்புத் தொகுதியில் அரசியல் பழிவாங்கல் நடைபெறுகின்றதென்று பறை அறையும் அமைச்சர் இதற்கென்ன பதில் சொல்லப் போகின்றாரோ?

இருந்த வேலையைக் கூட எந்தக் காரணமுமின்றிச் சிலர் இழந்திருக்கிறார்களே-ஏன்? அவர்கள் எதிர்க்கட்சி என்ற எரிவா?

பொதுத் தேர்தல் முடிவுற்றதும் தம்மை எதிர்த்து வேலை செய்த உத்தியோகத்தர்களை தாமதமின்றி வேறு மாவட்டங்களுக்கு அமைச்சர் அனுப்பிவைத்தாரே- அதற்குப் பெயர் என்ன? வெளியூர் வேலைவாய்ப்போ?

கொடுத்த வேலைவங்கிப் படிவத்தைத்தானும் கூட்டணியினர் என்ற காரணத்தினல் திரும்பப் பிடுங்கிக் கொண்டார்களே-இதுவும் வேலை வாய்ப்பின் ஒரு பகுதிதானே?

எழுநூறு பேருக்கல்ல-வேலையற்ற எல்லா இளைஞர்கள் இளைஞிகளுக்கெல்லாம் அமைச்சர்வேலை வழங்கட்டும்—மனப்பூர்வமாகப் பாராட்டுவோம்-மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என நம்பும் ஜனநாயக வாதிகள் நாம் என்ற காரணத்தினல்! ஆனல்—

கட்சி அரசியல் காழ்ப்புணர்வைக்காட்டி-

ஒரு புறம் சிரிப்பொலி சிந்தவும் - மறுபுறம் நெருப்பனல் கொழுந்து விட்டெரியும் கொடிய நிலைமையை உருவாக்க வேண்டாமென கற்குடாத் தேவநாயகத்தைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் பேசுகிறார்**

# சொந்த நாட்டார் சோற்றுக்கு வாடும்போது அந்நிய நாட்டார் சம்பளம் 50 ஆயிரம் ரூபா!

வெளிநாட்டு நிபுணர்களுக்கு இலங்கையில் மாத சம்பளமாக ரூபா ஐம்பது—அறுபது ஆயிரம்வழங்கப்படுகிறது. அத்துடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு; போக்குவரத்து சேவையும் வழங்கப்படுகின்றது.

நமது நாட்டின் டாக்டர்களோ அல்லது மற்றும் நிபுணர்களோ உலக தரத்திற்குக் குறைந்தவர்களில்லை. ஆனல் அவர்களுக்கு இவவாறான சம்பளம்—வசதி வாய்ப்புகள் கிடைப்பது இல்லை சிலவேளைகளில்மணித்தியாலக்கணக்கில் இரவிரவாக ஊழியமாற்ற வேண்டிய நிலைமை இவர்களுக்கு ஏற்படுகின்றது போக்குவரத்து வசதியோ—வீட்டு வசதியோ வெளிநாட்டினர்க்கு அளிக்கப்படுவது போன்று அவர்களுக்கில்லை.

மகாவலித் திட்ட இயக்கம் இதற்கு நல்லதொரு உதாரணம் நமது நாட்டில் திறமையுள்ள பொறியியலாளர், விவசாய நிபுணர்கள் எத்தனையோ பேர் இருக்கும் பொழுது இங்கு வெளிநாட்டு நிபுணர்கள் தருவிக்கப்பட்டுள்ளனர். மாதச் சம்பளமாக50-60 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இவர்களிலொருவர் மஹியங்கனையில் செலவுக்கும் ஒரு நாளைக்கு மாத்திரம் ரூபா 600 கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இவர்களை குடியமர்த்தியுள்ள வீடுகளுக்கு கூலி மாதமொன்றுக்கு 10-15 ஆயிரம் ரூபாவாகின்றது.

அதே வேளையில் இங்குள்ள தேசிய நிபுணர்கள் எவருக்கும் இந்தளவு சலுகைகள் இல்லை

அத்துடன் நமது நாட்டுடன் பொருளாதார உறவுகளைக் கொண்டுள்ள ஏகாதிபத்திய நிறுவனங்கள் தமதுசுரண்டலை தீவிரப்படுத்தவும் அதிசப்பத்தவும் சொந்தநிபுணர்களை இங்கு அனுப்பி வைக்கிறன. அவர்களுக்கும் மாதசம்பளம் 50-60 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

மத்திய வங்கியில் இவ்வாறான நிபுணர்கள் நிதந்தரமாக உலக வங்கியின் மூலமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில்' இலங்கை மத்தியபோக்குவரத்துசபைக்காக உலகவங்கியிடம் கோரப்பட்ட 350கோடி ரூபா கடனை வழங்குவது பற்றி ஆராய்வதற்கு ஏழுபேரினைக் கொண்ட நிபுணர் குழுவை அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது. இவர்களில் ஐவர் இலங்கை வந்து விட்டனர் இவர்களில் ஒருவருக்கு மாதச் சம்பளம் ரூபா 50ஆயிரம் வீதம். அரசாங்கம் வழங்குகிறது இவ்வாறாக ஏழு பேருக்கும் மூன்றரை இலட்ச ரூபாவை மாதா மாதம் சம்பளமாக வழங்க வேண்டியுள்ளது.

உள்நாட்டில் மக்கள் வருமானக் குறைவால் அவதிப்படும் நிலையில் வெளிநாடுகளுக்கு ஏற்று மதியாகும் ஏனைய வளங்களுடன் நமது ரூபாவும் இவ்வாறாக கொள்ளை போகின்றது. இதன் வாயிலாக ஏனைய முதலாளித்துவ நாடுகளில் உக்கிரப்படும் புத்திஜீவிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு நம்மூலமாக தீர்வுகாணப்படுகின்றது. இரண்டாவதுநமது செல்வத்தை இம் முதலாளித்துவ நாடுகள் கொள்ளையிட வாய்ப்பாகின்றது.

ஐ தே.க அரசின் கொள்கை ஏகாதிபத்திய— காலனித்துவப் பொருளாதாரத்தில்நமது நாட்டைவழி நடத்திச் செல்கின்றதென்பது வெளிப்படையானது ஏகாதிபத்திய முதலாளித்துவம் விஷ்வரூபத்தில் வாய் பிளந்து இலங்கை முழுதுமாகவிழுங்க போட்டுள்ள திட்டங்கள் படிப்படியாக நமது ஆட்சியினரால் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குதிகள் மூலமாக நிஜமாக்கப் பட்டு வருகின்றன.

# பழந்தமிழ்க் கலைகள் வளம்பெறச் செய்வோம்

## மானிப்பாய் நாட்டியாலய விழாவில் மாநகர முதல்வர் விசுவநாதன் பேச்சு!

**மானிப்பாய் நாட்டியாலயம் 9-11-86ல் நடாத்திய அதன் 8வது ஆண்டு கலை விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்- மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது-**

தமிழ் மக்கள் அன்னியர் ஆட்சிக்கு உட்படுவதற்கு முன்பு அதாவது மன்னர் ஆட்சிக் காலத்தில் முடியுடைய மூவேந்தர்களும் ஏனைய குறுநில மன்னர்களும் தான் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் அதைப்போன்றே தமிழ்க்கலைகளையும் ஆதரித்து வந்தார்கள்.

அதனல்தான் தமிழ் மக்களும் தமிழ் நாடும் அடிமைப்பட்ட இருள்காலத்தில் ஆதரிப்பார் இல்லாமையால் தமிழ்க் கலைகளும் மொழியும் ஓரளவு வளர்ச்சி குன்ற நேர்ந்தது. பொதுமக்களும் இவற்றை அசட்டை செய்தனர்.

பாரத நாட்டின் விடுதலை இயக்கமும் அதன் விடுதலையும் தமிழ் மக்களிடத்தும்கூட தேசிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தவறவில்லை. ஆயினும் விடுதலையடைந்த சுதந்திர நாடுகளில் சொந்த நாட்டுக் கலைகளை அந்தந்த

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அறிஞர் அண்ணாவின் அழகோவியம்

# 'இந்திராணி சேலை'

புராண மதிபடைத்த ஓர் மன்னன்—மந்தகாச வாழ் வால்மதியை மயங்க வைத்துக் கொண்ட மந்திரிமார்கள்—அர்தச் சபைக்கு வந்தான் ஒரு சாகசக்காரன்! அரசே! என்றான்: என்ன? என்று தர்பார் முறையில் கேட்டான் மன்னன்.

'அரசே! நான் எத்தனையோ இராஜாதி.ராஜாக்களைப் பார்த்தேன், அவர்களோடு பழகினேன்—ஆனால் ஒருவருக்காவது தங்களுக்குள்ளது போன்ற வீரதீரம் பராக்கிரமம் இல்லை, எனவே, தங்களைக் கண்டதும் அது தங்களுக்கே உரியது என்று தீர்மானித்து விட்டேன். என் காணிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன் காவலா, என்றான் காவலன் காணிக்கையை ஏற்றுக் கொள்ளும்படி ஒருவன் கேட்பது கண்டு மகிழ்ந்து அங்ஙனமே ஆகுக காணிக்கைப் பொருள் யாது? என்று கேட்டான்.,

'ஈரேழுபதினாலு உலகத்திலும் இதற்கு ஈடு கிடையாது வேந்தே.?

அப்படியா! மெத்தப் புகழ்கிறாயே! என்ன அது? நவரத்தின மாலையோ— முத்துப் பல்லக்கோ—தந்தக்கட்டிலோ தங்கப் பாளமோ......

மன்னா! இதெல்லாம் சாமான்ய மக்களுக்கு! தங்களுக்கு நான் தரப்போவது......

என்ன! என்ன அது?

'இந்திராணியாரின் எழில் மிக்க சேலை—தங்கள் பட்டமகிஷி பூரிப்படைய!'

இந்திராணி தேவியார்...

ஆமாம் அரசர்க்கரசே! தேவேந்திரனுடைய பாரியார்'



சாட்சாத் இந்திராணி தேவி, தவமிருந்து பெற்ற சேலை; அதை அணிந்துகொண்டால், அரசே! வெள்ளை யானை கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் கற்பக விருட்சம், காமதேனு குற்றவேல் புரியும்— அப்படிப்பட்ட மகிமை வாய்ந்தது!

,அப்படியா......நம்ப முடியவில்லையே...'

'இப்போது நம்பவேண்டாம் மகாராசா! சேலையை நான் இந்தச் சபையிலே பிரித்துக் காட்டப் போகின்றேனே அப்போது நம்புங்கள்— இப்போது ,ஏன்? எழைபேச்சு அம்பலம் ஏறுமா?

'தேவேந்திரனுடைய தேவியின்சேலை...'

,தங்கள் திருச் சபையில் கொண்டு வந்துகாட்டப்போகின்றேன்......'

,யார் நீ?,

'உருகண்டு எள்ளற்க' மன்னா! உண்மையைப் பொறுத்திருந்து பாரும்'

எப்போது கொண்டு வருவாய்?

ஆறேழுமண்டலப் பூசை — அது முடிந்ததும்அந்த அற்புதமான சேலை!

இந்தஉரையாடலுக்கு பிறகு சாகசக் காரனுக்'ஆண்பனையில் சகல வசதிகளும் செய்து தரப்பட்டன. பூசை நடத்தி வந்தான்'மலர்களை விடப்பழங்கள் அதிகம் செலவாயின, பூசைக்கு! தேனும் பாலும் குடம் குடமாக! தேவபூசைக்குத் துணை செய்ய தத்தைகள் பொன் கேட்கும் போதெல்லாம்! இப்படிப் போக போக்கியமாக சாகசக்காரன் இருந்து வந்தான்'

ஆறு மண்டலம் முடிந்தது ஏழும் வந்து சென்றது;மன்னன்-இன்னும் ஏன் தாமதம் என்றான்.

மன்னா! பூசை முடியவில்லையே ஆறேழு மண்டலமாகும் என்றேனே மறந்தீரா? என்றான் சாகசக்காரன்.

நான் எப்படி மறப்பேன்? நேற்றோடு ஏழுமண்டலம், இருநூற்று எண்பது நாட்கள் முடிந்தனவே என்றான் மன்னவன் பெருஞ்சிரிப் பொலிகிளம்பிற்று!

மன்னா, ஆறேழு மண்டலம் என்றேன்—தாங்கள் அதன் தாற்பரியத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆறேழு—நாற்பத்திரண்டு— நாற்பத்திரண்டு மண்டலங்கள்— நாற்பத்திரண்டு நாற்பது நாட்கள்—என்று விளக்கமுரைத்தான்—மன்னன் திடுக்கிட்டும் போனான் எனினும் என்ன செய்வது? இந்திராணியின் சேலை—அதன் மகிமையால் வெள்ளையானை— காமதேனு கற்பக விருட்சம்! சரி, என்றான்—சாகசக்காரன் இராஜ போகத்தில் மூழ்கினான்!

நாட்கள் நகர்ந்தன— கடைசியில் அவன் சொன்ன நாள் வந்தது நாளை தர்பாரில்என்று சாகசக்காரன் தவயோகிபாணியில் சொன்னான்,

மன்றம் கூடிற்று— மன்னன் ஆவல் நிரம்பிய கண்களுடன்! சாகசக்காரன் உள்ளே நுழைந்துதான்—ஓம்என்றான்மூன்று முறை! மேலே பார்த்தான் கரத்தைஉயர்த்தினான்— ஆகா என்றான்— கண்களிலே ஏத்திக் கொண்டான்— எழுச்சி மயமான நிலை பெற்றவன்போலாகி என்னை நம்ப மறந்தீர்களே காவலனே! இதோபாரும்வானவில்! இதனிடம் என்ன செய்யும், ஆகாபார்த்துக்கொண்டே யுகக்கணக்கில் இருந்து விடலாம் போலிருக்கிறதே என்ன பளபளப்பு! எத்தகையஜொலிப்பு! தொட்டால்வெண்ணெய் மீது கைபடுவது போலிருக்கிறதே' என்று பேசலானான், மன்னன் திகைத்தான்— மந்திரிகள் மருண்டனர்— ஏனெனில் சாகசக்காரன் வெறுங் கையுடன்தான் தெரிகின்றான்!

'இந்திராணியின் சேலை... எங்கே? என்று மன்னன் இழுத்தாற் போல் கேட்டான்.

இதோ மன்னவா; என்னுடைய சித்து முறைக்கு மெச்சிச் சிவனார்அருளிய வத்தின் விளைவு— வண்ணச்சேலை— இதோ—இதோ—என்றுகூறிய படி சேலையைப் பிரித்துக்காட்டுவதுபோல் பாவனை செய்தன்!

'எனக்குத் தெரியவில்லையே என்று ஏக்கத்துடன் கூறினான் மன்னவன்,

திகைத்தவன் போலானான் சாகசக்காரன்—பயந்த குரலில் மன்னா! தங்களுக்குத் தெரியவில்லையென்று கூறுகின்றீர்கள்......என்றான் மன்னன் தெரிய காணேம்' என்றான் மன்னன் ஐயகோ! ஒரு விஷயத்தைக் கூறமறந்தேன்—அறிவிலி நான்! அரசே! யாருடைய அன்னை பத்மினியோ, அப்படிப்பட்டவர்களின் கண்களுக்குத்தான் இது தெரியும்-உத்தமியாயிற்றே உமது அன்னை உமக்குத் தெரிந்தாக வேண்டுமே என்றான்!

மன்னனுடைய மாதாவின் மீது மாசு உண்டு மன்னனுக்கும் அது தெரியும்—எனவே குட்டு உடைபட்டுவிட்டதே என்றுகுமுறிஆகா... அற்புதம் அற்புதம்! இதல்லவா தேவ வரப்பிரசாதம் !,என்று கூறியபடி சாகசக்காரன் கையிலிருந்த சேலையை வாங்கினான்; (பாவனைதான்) மந்திரிகளிடம் காட்டினான்-அவர்களோ மன்னனுக்கு ஒத்து ஊதினர்! சாகசக்காரன் வெற்றி பெற்றான்.

திட்டங்கள் தீட்டும் ஆட்சியினர் இதுபோலவே இந்திராணி சேலை காட்கிகிறார்கள் தெரியவில்லையே என்றால் உனக்குத் தேசத்தலைவரிடம் நம்பிக்கையில்லை- அதனால்தான் தெரியவில்லை என்கிறார்கள் நமக்கேன் இந்தவீண்பழிஎன்று பயந்த பல பேர் (ஆளும் கட்சியாளர்) தங்களைத் தேசத் தலைவனில் நம்பிக்கை கொண்டோர் என்று காட்டிக் கொள்வதற்காகவே,, தெரிகிறது என்று குதூகலத்துடன் பேசுகிறார்கள் பரிதாபமாகத்தான் இருக்கிறது - இல்லையா தம்பி!

(தம்பிக்கு அண்ணா எழுதிய கடிதத்திலிருந்து ஒருபகுதி)

---

## சம்மாந்துறை கூட்டணி தொகுதிக் கிளை கூட்டம்

சம்மாந்துறைத் தொகுதியில் ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சனை பற்றி ஆராய்வதற்காக இப்பகுதித் தொகுதிக் கிளையின் கூட்டம் 27 10,80ல் அம்பாறை மாவட்டத் த வி. கூ. அமைப்பாளர் திரு. ஆ வேல்முருகு ஆசிரியர் அவர்கள் தலைமையில் மல்வத்தையில் உள்ள வே சின்னத்தம்பி அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது,

காணிப்பிரச்சினை சம்பந்தமாக எழுந்துள்ள நிலைமையை எதிர்க்கட்சி முதல்வர் திரு அ அமிர்தலிங்கம் அவர்களிடம் எடுத்துச் சொல்லும் பொறுப்பு கூட்டத்தின் முடிவில் திரு. ஆ. வேல்முருகு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

---

## தனிநாயகம் அடிகளார் நினைவு தினக் கூட்டம்!

இம்மாதம் 9ந் திகதி ஞாயிற்றுக்கிழமை புங்குடு தீவு புனித அந்தோனியார் பாடசாலையில் தவத் திரு தனி நாயகம் அடிகளார் நினைவு தினக்கூட்டம் நடைபெற்றது

டாக்டர்—ஜே பி.சி. பிலிப் (தலைவர், வீரமா முனிவர் கலைக்கழகம்) தலைமை தாங்கிய மேற்படிக் கூட்டத்தில் கலாநிதி. அ. சண்முகதாஸ், புலவர் ஈழத்துச் சிவானந்தன் பண்டிதர் க யோ, ஆசிநாதன் ஆகியோர் உரையாற்றினர்

---

இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாடு ஏற்படவும்—

ஆலய முகாமைகளின் மனக்கதவுகள் திறக்கவும்—

மக்கள் மத்தியில் மனமாற்றம் சிந்தனைத் தெளிவு ஏற்படவும்—

வேண்டி—

அறவழிப் போராட்டக்குழு
நடாத்தும்

## "பிரார்த்தனை"

இடம்:- தந்தை செல்வா நினைவாலயம்.

காலம்;- 21 11. 1980—(போயா)

நேரம்.— காலை 6 — மாலை 6 வரை

பிரார்த்தனைமுடிவில்சாதி—சீதனப் பேய்களின் கொடும்பாவிகள் எரிக்கப்படும்.

இந்நிகழ்ச்சிகளில் தங்களையும் பங்குகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்—

—அறவழிப் போராட்டக்குழு

# அடிமை இருள் அகற்றும் ஆதவன்

**வ. பொன்னம்பலம் எம். ஏ.**

"இருண்ட கண்டத்தின்' தெற்குப்பகுதியில்— இயற்கை வளம் குவிந்த ஒரு பிரதேசம் இதுவே தென்மேற்கு ஆபிரிக்காஎன்ற தென் ஆபிரிக்கரின் குடியேற்ற நிலப்பகுதி மக்கள் எண்ணிக்கை 11 இலட்சம். அவர்களுள் மூன்று நான்கு இனப்பகுதியினர் அனைவரும் தென் ஆபிரிக்க வெள்ளை ஆதிக்கத்தின் சமமான அடிமைகள். இரண்டாம் உலகப் போரின்பின், 75 ஆண்டுகள் ஜெர்மனியரின் ஆதிக்கம் நிலவிய இப்பகுதி— தென் ஆபிரிக்க 40 லட்சம் வெள்ளை வெறி ரின் காட்டாட்சிக்கு உட்படுத்தப்பட்டது — தர்மகர்த்தா சபை என்ற போர்வையில்—

இப்பகுதியேநமீபியா என்ற பெயரில் 14 ஆண்டுகள் வரை விடுதலைக்கா  வீரப்போர் நடாத்தும் swapo என்ற மக்கள் நிறுவனம் வெற்றிவாகை சூட வீறுநடை போடும் ஆபிரிக்கநாடு—இங்கு 70,000 வெள்ளை வெறியரின் கூலிப் படையினர்— விடுதலையை நசுக்குவதற்காக நிலைகொண்டுள்ளனர் .உயுரேனியம்செம்பு கார்கியம்— வைரம், வெள்ளி சுரங்கங்களின் செல்வங்களைச் சூறையாட உலக பல் இன வர்த்தகஸ்தாபனங்கள் இங்கு நிலைகொண்டுள்ளன— ஏகாதிபத்திய வல்லரசுகளின் நாட்டம் இதனால் ஏற்பட்டுள்ளது.

சுரங்கங்களுக்கு மக்கள் வேலைக்கு சென்றால் 6-7 ஆண்டுகள் கூலி வேலை செய்யவேண்டும். குடும்பம் கிராமத்தொடர்புகள் இன்றி சிறைக்கைதிகள் போன்று இம்சிக்கப்பட்டு வந்தவர்களேநமீபிய மக்கள். பெரும்பாலான மக்கள் கிராமங்களில்—குடிசைகளில்கல்வி சுகாதாரம், உணவு வசதி போதியளவு இன்றிஇம்சிக்கப் பட்டனர்—

செல்வம் அன்னியர்கையில் வறுமைதான் மக்களின் சொத்து, விவசாயம் சிறு அளவில் இயந்திரம் விஞ்ஞானம் போன்றவசதிகள் இன்றி நடைபெற்றுவந்தது— வெள்ளையருக்கு சொந்தமானவர்த்தக மட்டத்தில் அமைந்த சில விவசாயப் பண்ணைகள் உண்டு ஏனைய சகல பொருட்களும் — தென் ஆபிரிக்க வெள்ளை நிறத்திமிர் ஆதிக்கத்தின் உற்பத்திப் பொருட்களே— சந்தைப் படுத்தப்படுகின்றன— தென் ஆபிரிக்காவின் மாகாணம் போன்றுநமீபியா நடாத்தப்படுகின்றது—

நமீபியாவின் விடுதலை இரு அம்சம் கொண்டது.

(1) அரசியல் சுதந்திரம்—

(2) சுரண்டல் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து முதலாளித்துவ முறையை மாற்றி வர்க்கபேதமற்ற சோசலிச சமூகம் ஒன்றை நிறுவுதல்— எனவே swapo நமது விடுதலை இலக்குகள் பற்றிகுறிப்பிடும் போது "political and social emancipation"— அதாவது அரசியல் சமுதாய விடுதலைப் போர் என்றே கூறுகின்றனர், இதனால் ஏற்றத்தாழ்வுகள்— இனபாகுபாடுகள்— வேலை இல்லாப் பிரச்சினை போன்ற சகல கொடுமைகளுக்கு ஒரே தரத்தில் தீர்வு— விடுதலை காண விழைகின்றனர் நமீபியர்—

இங்கு அரசியல் சுதந்திரம் எதுவும் கிடையாது. அடக்குமுறை அடிக்கடி கட்டவிழ்த்து விடப்பட்டு மக்களை நூறு றுக்கணக்கில் 'நரபலி'கொண்டுவருகின்றனர்—மேற்குவல்லரசுகளின் ஆசிபெற்ற வெள்ளை வெறியாட்சியினர்.

1966 முதல் இத்தகைய அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக ஒரு புதிய மக்கள் விடுதலைப்படையை swapo அமைத்தது ஆரம்பத்தில் மிகச்சிறு அளவில் இருந்தபடை இன்று 14 ஆண்டுகளுக்குப்பின்— நமீபியாவின்— தொழிலாளர் விவசாயிகள் இளம் புத்தி ஜீவிகளைக்கொண்ட ஒரு பெரும் தொண்டர் படையாக மாறி விட்டது. இப்படை கட்டுப்பாடு, நவீன ஆயுதம்—தாங்கும் திறன்யாவும் தெளிவாக உள்ள முதிர்ந்தபிரிவாகமாறி வருவது கண்கூடு—

நமீபியாவின் விடுதலை வீரருக்கு நிலைக்களம் மக்கள் ஆதிக்கம் செலுத்தும் சோவியட்— கியூபா போன்ற நாடுகளின்நட்புறவு பெற்ற நமீபியாவின் வட எல்லையில் அமைந்துள்ள அங்கோலா என்னும் நாடே— இதேபோன்று சாம்பியாவிலும் நமீபியர் கல்விநிறுவனம் என்ற நிறுவனத்தில் நமீபியர் கல்வி நிர்வாகப் பயிற்சி பெறுகின்றனர்—பல விடுதலை பெற்ற ஆபிரிக்க நாடுகளும் நமீபியாவின் சுதந்திரத்திற்கு ஆதரவு—ஆத்மீக ரீதியாக மட்டுமன்றி ஆயுத வடிவிலும் கொடுத்து வருகின்றனர்.

சாம்பியாவிற்கு அண்மையில் வருகைதந்த சோவியத் தூதுக்குழுவை வரவேற்றுப் பேசிய சாம்பிய ஆளும் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் பகிரங்கமாகஉலகமுற் போக்கு நாடுகளான சோவியத் போன்ற சோஷலிச நாடுகளை நமீபிய விடுதலைக்கும்— தென் ஆபிரிக்காவின் 80 லட்சம் கறுப்பரின் விடுதலைக்கும் வழிவகுக்கும் வகையில் அனைத்து உதவிகளையும் தரும்படி வேண்டியுள்ளார்"

swapo இயக்கத்தின் உதவித் தலைவர் ஒருவர் அண்மையில் இயக்கத்தால் விலக்கப்பட்டதும் அவரை விலக்கியது தவறு என்று கூறி இதுவரை"பாலுக்கும்காவல்பூனைக்கும்தோழன்' என்று நடித்து வந்த (u s A) அமெரிக்கா swapoவுக்குத் தான் தந்து வந்த உதவிகளை நிறுத்தி உள்ளதும்குறிப்பிடத் தக்கது.இதே போன்று சாம்பியாவிற்கு அமெரிக்கா இதுவரைதந்து வந்த உதவிகள் குறைக்கப்பட்டுள்ளது. இது பற்றி அமெரிக்க வட்டாரம் தந்த காரணம் ,,சாம்பியா யுத்த விமானங்களைசோவியத் திடம் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுவருதலே" என்றும் கூறப்பட்டது.

swapo-என்ற நமீபிய மக்கள்விடுதலைஇயக்கத்தைபிளவு படுத்தி'ஒரு பகுதியினரை பணம் கொடுத்து தமது அரசியல் கூடாரத்தின்கீழ் கொண்டுவர அமெரிக்காமுயல்வது நமீபியா விடுதலை இயக்கத்தை பெலவீனப்படுத்தவே உலக அரங்கில் அமெரிக்கா விடுதலை இயக்கங்களுக்குபேராதரவு தருவது போல நடித்து தமது ஏகாதிபத்திய நோக்கங்களை நிறைவேற்ற முயல்வது நமீபிய விடுதலைக்கு குழிபறிக்கவே.

swapo இயக்கம் ஓர் தேசிய விடுதலை இயக்கம்.இதுசுயமாகவும்,சுயவிருப்பத்தின் அடிப்படையிலும்இயங்கும்அனைத்து அரசியல்விடுதலை— சமுதாய விடுதலை நாடிநிற்கும் சக்திகளின்-மனிதர்களின் ஸ்தாபனங்களின் ஒன்றிணைப்பே ஒடுக்கப்பட்ட உரிமை இழந்த மக்களின்போராட்டமுன்னணிப் படையே-இம் மக்கள் இயக்கம். ஆகவே இது தேசிய ஐக்கியத்தின் உயர்மட்டஅரசியல் பீடமாகும்.

swapo இயக்கம்— தமது இலட்சியம்;

(1)விஞ்ஞான ரீதியான சோஷலிசசமூகஅமைப்பேஎன்றும்-

(2) அரசியல் சமூகவிடுதலை காண அனைத்து மக்களும் ஆயுதம் ஏந்தி போராடுதல் என்றும்-

(3)ஏகாதிபத்திய எதிர்ப்பு முதலாளித்துவ எதிர்ப்புஇயக்கத்தில் நம்பிக்கையுடையசகல இன' மத இயக்கங்களையும் சமத்துவத்தின் அடிப்படையில் ஒருமுகப்படுத்தியும் உள்ளது.

(4)1973 முதல் ஐ நா- அங்கீகாரம் பெற்ற இவ்விடுதலை இயக்கம்—ஐ.நா-சபை நிறுவனங்களில் பார்வையாளர் அந்தஸ்து பெற்று இயங்கிவரும் இயக்கமாகும்.

(5)ஆபிரிக்கா ஐக்கிய ஸ்தாபனம்.நடுநிலைநாடுகள் ஸ்தாபனம்,சோஷலிச முகாம் நாடுகளின் தார்மீக—யுத்தத்தளபாட உதவிகள் பெற்று இயங்கிவரும் 'P.L O.'—polisario போன்ற அணிகளுடன் உறவு கொண்ட இயக்கமாகும்.

தெளிவானகொள்கைகட்டுப்பாடான போராட்ட ஸ்தாபனம்,தியாகம்—இவற்றில்புடம் போடப்பட்ட, இந்தஸ்தாபனம்''போராட்டத்தை அழகுபடுத்தவோ அன்றி விளையாட்டுப் போட்டியாகவோ நாம் ஆயுதம் தாங்கவில்லை— அரசியலைஅர்த்தமுள்ளதாக்க- அரசியல் சமூக விடுதலைக்கு வித்திடவே ஆயுதம் தாங்குகிறோம் ,,என்று பொறுப்புணர்ச்சியுடன் கூறி வருகின்றனர்.- அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு வழிவசதிகளை திறந்து விட்டபடியே இருக்கும் அதே வேளையில் அருகருகா போராட்டத்தையும் சரியானநட்புகளைத் தேடியபடியே தீவிரப் படுத்திவருகின்றனர்.

நமீபியா ஆபிரிக்காக்கண்டத்தின்—விடிவெள்ளி- புரட்சிப்புயல் புத்தொளிவீசும்- அடிமை இருள் அகற்றும் உதயசூரியன்.

---

# துரோகத்திற்கு துணைபோகலாமா?

**சுதந்திரன் ஆசிரியரைக்கேட்கின்றார்**
**திருக்கோணமலை— லாசறஸ்**

அன்புள்ள'சுதந்திரன்' ஆசிரியர் அவர்கட்கு—

சமீபகாலமாக நீங்கள் கூட்டணியையும் அதன் தலைவர்களையும் கடுமையாகத் தாக்கி, பேசியும் எழுதியும் வருகிறீர்கள்.இந்தச்செயலைமானமுள்ள தமிழன் அனுமதிக்கமாட்டான்.என்பதைநீங்களும்மக்கமாட்டீர்கள் என நம்புகிறேன்.

தலைமையில் குறைகாணும் நீங்கள்-தலைவர் அமிர் கூறிவருவது போல ஏன் தலைமையை ஏற்று தமிழினத்தையும் அதன் லட்சியமாகிய தமிழ் ஈழத்தையும் முன்னெடுத்துச் செல்லக் கூடாது?

போராட்டம்-போராட்டம் எனக் கதறும் நீங்களும் உங்கள் பக்த சிகாமணிகளும் நேரடியாக அரசுடன் போராட்டத்தை ஆரம்பிக்கலாமே! அதை விடுத்து நீங்களே ஒரு காலத்தில் வாயார மனதாரப் பாராட்டியவர்களை இன்றுதிட்டித் தீர்ப்பதில்ஏதும்லாபத்தை எதிர்பார்க்கிறீர்களா? அல்லது மாட்சிமை தங்கிய ஜனாதிபதியின் பாராட்டுக் கிடைக்கும் என எதிர்பார்க்கிறீர்களா?நீங்கள் உள் வீட்டு விஷயத்தைத் தெருக் ததாக்கமுனைவதைப் பார்க்கும்போது மற்றுமோர் மட்டுநகர் [இராசு]உருவாகின்றாரோ என ஐயப்படவேண்டியுள்ளது

இலட்சிய வாதிகள் இலட்சியத்தை நிறை வேற்றுவதை நோக்கமாகக் கொண்டிருப்பார்களே தவிர தலைமையைத் தாக்கி தகர்த்துஎதிரிக்குஇடம் கொடுக்க மாட்டார்கள் என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள்.

அரசியல் மடலில் நீங்கள் எழுதிவந்ததெல்லாம் உண்மையாயின்உடனடியாகஉங்கள்,தாக்குதலே நோக்கு' என்ற பகுத்தை மாற்றிக்கொள்வீர்களென நம்புகின்றேன்.

உங்களைப் போல் அல்லாது தந்தையின் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு செயலாற்றியதால் உடல் உறுப்புக்களை நிரந்தரமாக இழந்துவிட்ட பல உண்மையான தொண்டர்களைக் கொண்ட புனிதமான திருக்கோணமலையில் இருந்து மிக பணிவுடன் உங்களைநான் கேட்டுக்கொள்வ தெல்லாம் இதுதான்—

தயவு செய்து தந்தை ஆக்கித் தந்த இந்தப் புனித இயக்கத்தை குரங்கு கை மாலையாக்கி விட வேண்டாம்.கூட்டணியின் அழிவுக்குக் காரணமாகும் எந்தச்சக்தியும் 35 லட்சம் தமிழ் பேசும் மக்களின் கேள்விக்குப் பதில் கூறவேண்டிய நிலைவரும் என்பதை ஞாபகப் படுத்தி விடைபெறுகின்றேன்.

இப்படிக்கு
உங்கள் மீது மதிப்புள்ள
அ.லாசறஸ்

# சுவரின்றிச் சித்திரம் வரையலாமா?



## அபிவிருத்திச்சபை குறித்து கவிஞர் காசிஆனந்தன் பேச்சு!

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில்சனிக்கிழமை நடைபெற்ற முப்பெருந்தியாகிகள் நினைவாஞ்சலிக்கூட்டம்அநேக பொருள் பொதிந்த கருத்துக்களை அள்ளித்தெளித்தது. அந்தத் தியாகிகளின் காலகட்டங்களையும் இன்றைய தலைவர்களின்—தியாகிகளின் காலகட்டத்தையும் ஒப்பிட்டு நோக்கித் தெளிவுபெறச் செய்தது,

அக்கூட்டத்திற்கு திரு. பி துரைரத்தினம் தலைமை தாங்கினார், இன்றைய தமிழீழ முன்னணித் தலைவர்கள் பலரும்கலந்து கொண்டு இன்று தமிழ் மக்கள்மீது படிந்திருக்கும் பனிப்புகாரைக்கலைந்தோடச் செய்தனர் தென்தமிழீழத்தைச் சேர்ந்த தலைவர்கள் தமது பூமி நாளிலும்பொழுதிலும் சிங்களக்குடியேற்றத்தால் கபளீகரம் செய்யப்பட்டு வருவதை உணர்ச்சி பொங்க எடுத்துக் கூறினார்கள்,

ஈழத்தமிழினத்தின் எழுச்சிக்குரலாக விளங்கும் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள்தமது வீட்டின் முன்னால் உள்ள முகத்துவாரத்தில் சிங்களக்குடி யேற்றத்துக்காக வீடுகள் கட்டுப்பட்டுவருவதை அழாக்குறையாக எடுத்துக் கூறினார்? குறிப்பாகத் தென்தமிழீழம் பாதுகாக்கப்பட மாவட்டஅபிவிருத்தியை நாம் ஆதரித்தே தீரவேண்டும் என்பதை மிகத்தெளிவாக எடுத்துக் காட்டினார் அவரது பேச்சை சபையோர் மிக அமைதியாகவும் ஆர்வத்துடனும் கேட்டு ரசித்தனர்.

அவர் சொன்னார்.—

"சோரிலன்றி வஞ்சனையால் பறிகொடுத்த தனதுபுண்ணிய பூமியாம் தமிழீழத்தை மீட்டெடுத்து தமிழன்னையை அரியாசனத்தில் ஏற்றி மீண்டும் தமிழன் தமிழனாக வாழவேண்டும் என்பதே இன்று ஈழக்தமிழினத்தின் ஒரே குறிக்கோள் அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் கட்டாயம் வாழ்ந்தே தீர வேண்டும் நாமன்றி நாடு எதற்கு? சுவரின்றி சித்திரம் வரையலாமா?

மூன்று கைதிகள் சிறைச்சாலையில் இருக்கிறார்கள், முதலாமவன் சிறைச்சாலை மேலதிகாரிகளுக்கு தாள்பிடித்து தோள்பிடித்து நல்ல உணவாக சாப்பிட்டுத் தன்னை வளர்க்கிறான். இது அரசுக்கு பந்தம் பிடித்து மந்திரி பதவி பெற்று தம்மை அபிவிருத்தி செய்வது போன்றது.

இரண்டாமவன் எல்லோருக்கும் உள்ள அந்த உரிமை தனக்கும் உண்டு என்ற எண்ணம் கொண்டவன் அவனுக்கு சிறைச்சாலையில் உணவு பரிமாறப்படுகிறது உணவிலே கத்தரிக்காயுடன் சிறு புழுவும் கிடக்கிறது அவன் அதை சிறை ஆணையாளரிடம் கொண்டு சென்று காட்டி நல்ல கத்தரிக்காயில் சமைக்க உத்தரவிடுமாறு கோருகிறான் அப்படியே நடக்கிறது இது அரசு தனது பகுதிகளை அபிவிருத்தி செய்யு போது எனது பகுதியையும் அபிவிருத்தி செய்யும்போது எனது பகுதியையும் அபிவிருத்திசெய் என்று கேட்பது போலானது.

மூன்றுமவன் சிறையில் இருக்கிறான் அவனது தாய், தந்தை சகோதரர் மாதத்தில் ஒரு முறை அவனைப்பார்க்க வருவார்கள். அப்போது வீட்டிலிருந்து விசேஷமாகத் தயாரித்த உணவைக் கொண்டு சென்று கொடுப்பார்கள் இது அரசாங்கம் தானாக எமக்குத் தரும் மாவட்ட அபிவிருத்திச் சபைபோன்றது வீட்டில் இருந்து வந்த சாப்பாட்டில் முட்டைமீன் என்பன இருப்பது போல் மாவட்ட அபிவிருத்திச் சபைகளிலும் சில விசேஷங்கள் இருக்கவே செய்கின்றன,

சிறையிலிருக்கும் மூவரும் சாப்பிடுவது அடிமைத்தீனே தான் மூன்றாவது சாப்பாடு வீட்டிலிருந்து வந்தாலும் உரிமையோடு சாப்பிட முடிந்ததா? இல்லை? பூட்டிய இரும்புச் சிறைக்கதவுகளின் பின் சென்றதும் அதுவும் அடிமைத்தீன்தான் மூவரும் தாம் எப்படியும் சிறையில் இருந்து வெளியேறவேண்டும் என்ற அவா உள்ளவர்கள். அடிமைத் தீனை உட்கொள்ளா விட்டால் வெளியே எலும்புக்கூடாகத்தான் போக நேரிடும் என எண்ணி நேரம் தவறாது சாப்பிட்டுக் கொள்கிறார்கள்.

அதேபோன்று நாமும் நம்து இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்றே ஆகவேண்டும்'நாம் எப்படியும் போராடியே உரிமைகளைப்பெறவேண்டியுள்ளது'அதற்கு நமக்கு மாவட்ட அபிவிருத்தி சபை என்னும்தீனிதரப்பட்டுள்ளது. அது வீட்டிலிருந்து வந்தது போன்ற உணவு அல்லவா' எனவே அங்குள்ள போஷாக்குள்ள பதார்த்தங்களை உட்கொள்ள எம்மைப் பிடித்து வைத்துக் கொள்வோம் அத்துஅத்துடன் எமது போரையும் தொடர்ந்து நடத்துவோம்.

நாம் அடிமை விலங்கால் இறுகப் பிணைக்கப்பட்டுள்ளோம் எனவே எமக்குத் தரப்படும் தீனியான மாவட்ட அபிவிருத்தி சபை! சிறைக்குள்ளேதான் தரப்படுகிறது என்பதை மறவாதே!மறக்காதே அடிமைத்தீன் சத்துள்ளதாக இருப்பதால் நாம் உட்கொண்டு கொண்டே அடிமை விலங்கை உடைப்போம்'' என்றார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பழந்தமிழ்க் கலைகள் வளம்பெற...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு அரசுகள்தாம் ஊக்குவித்து ஆதரித்து வருகின்றன. வெளிநாடுகளுடன் பண்பாட்டு உறவுகளை வளர்த்துக் கொண்டு தமது நாட்டுக்கலைகளை அனைத்து ஏனைய உலகுக்குமே அவை அறிமுகம் செய்து வைக்கும் வாய்ப்பைத் தேடிக்கொண்டுள்ளன. உலக நாடுகள் பலவற்றிலும்இதுவே நடைமுறையாக உள்ளது.

ஆறுகோடி மக்களைக்கொண்ட தமிழர்கள் வதியாத நாடு கிடையாது. ஆனாலும்நமக்கு என்று ஒரு சுதந்திர நாடு இல்லை, ஆறுகோடி அரபுக்களுக்கு தமதென்று கூறிப்பெருமைப்படுத்துவதற்குஒன்றுக்கு மேற்பட்ட பல நாடுகள் உண்டு. எண்ணெய் வளத்தை வைத்துக்கொண்டு அகிலத்தையே அவர்களால் ஆட்டிபடைக்க முடிகிறது நாடற்ற உலகத் தமிழனுக்கு முதன் முதலாக ஒரு சுதந்திரத் தாயகத்தை தாபிக்கும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டிருக்கிறது தமிழ்க் குலம். அதற்காக லண்டனிலும். நியூயோக்கிலும், ஜெர்பனியிலும் பிரான்சிலும் இருந்துகூட குரல்கொடுக்கப்படுவதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உலகத்தமிழன் கனவு நனவாகுமானால் உலகின் முதலாவது சுதந்திரத் தமிழ் ஈழம் உதயமானால் தமிழ்க் கலைகளை உத்தேச சோசலிசத் தமிழ் ஈழத்தின் மக்கள் அரசே ஊக்குவித்து ஆதரிக்கத் தலைப்பமென்பதில் ஐயமில்லை. அந்நாள்வரை நாட்டியாலயம் போன்ற கலைக்கழகங்கள்தாம் பொது மக்கள் ஆதரவுபெற்றுத் தமிழ்க்கலைகளை மங்கவிடாது ஊக்குவித்து வரவேண்டும். வர்த்தகப் பெருமக்கள் நிறைந்த பூமி மானிப்பாய். பெருஞ்செல்வந்தர்களான வர்த்தகப் பெருமக்களும் தமிழ்க் கலைகளை ஊக்குவிக்கும் பணியில் நாட்டியாலயம் போன்ற கலைகழகங்களைக் கைதூக்கிவிடலாம். கைதூக்கிவிடவேண்டும்.

—இவவாறு முதல்வர் பேசினார்.

## 'பொய்யின் செல்வரின்' புளுகு மூட்டைகள்!

பொய்யைப் பொதுவாக சமயங்கள் எல்லாம் வெறுக்கின்றன. அதிலும் இந்து மதம் பொய்யை மகாபாவம் என்றே குறிப்பிடுகின்றது. ஆனல்-

சிறிலங்கா நாட்டின் சிறப்புமிகு இந்து சமய கலாசார அமைச்சர் திரு செ இராசதுரை அவர்களோ பொய்யினை வளர்ப்பதே ஒரு புனிதமான பணியாகக்கொண்டிருக்கிறார்.

அப்படியா.........? என்று கேட்கின்றீர்களா? ஆமாம்...... இதோ அவர் பலமுறைசொல்லியும் செய்யாத பணிகளையே உங்கள் முன் பட்டியல் போட்டுக் காட்டுகின்றோம்!

1. கலைஞர்களுக்கு உதவிப் பணம் (ஒரு உதவியையும் காணோம்)

2. புலவர் மணி பெரியதம்பிபிள்ளைக்குக் மணி மண்டபம் (இன்னும் மணியும் இல்லை-மண்டபமும் இல்லை)

3. அறப்போர் முன்னணித் தலைவர் அரியநாயகத்திற்குசிலை (இன்னும் இல்லை)

4. நீலாவணன் கவிதைத் தொகுப்பு (இராசதுரையா வெளியிட்டார்?)

5. தமிழகக் கலைஞர்களைக் கொண்டு கல்லடி மெரீனா பீச் சில்சிலப்பதிகார விழா. (இன்னும் தமிழகக் கலைஞர்களுக்கு கடவுட் சீட்டுக் கிடைக்கவில்லையோ?)

6. நீச்சல்தடாகம்(நங்கள் தடவித் திரிகிறோம்-தட்டுப்படவில்லையே)

7. மணிக் கூட்டுக் கோபுரம் (இதைச் சொன்னவர் சிலிங்கோ கோபுரத்தில் இருக்கிறார்)

8. மட்டுநகர் வாவியை ஊடறுத்து தொங்கு பாலம்(நானும் வாவியைச் சுற்றுகின்றேன் தொங்கு பாலம் எங்கே?)

9. நவீன சந்தை (நாட்டிய அடிக்கல் மீன்கழுவி ஊற்றும் தண்ணீரில் தினமும் நீராடுகின்றது)

10. உன்னிச்சை வலது கை வாய்க்கால் (படுவான்கரையக்கள் பாவம்)

11. ஆரையம்பதி மகாவித்தியாலயத்துக்கு மேல் மாடிக் கட்டடம் (எங்கே!எஙகே?என்று மக்கள் கேட்கிறார்கள்)

இப்படி எத்தனை எத்தனையோ அடுக்கிக் கொண்டே போகலாம். பொய்யை வெறுக்கும் இந்து சமய கலாச்சார அமைச்சர் இப்படி புளுகு மூட்டைகளை அவிழ்த்து விடலாமா?

இவற்றைவிட இளைஞர்களிடம் வேலை பெற்றுத்தருகின்றேன்என்று .........அந்தப்பெரு பொய்யை எப்படிச் சொல்ல

—இரா-தவராசா
மட்டக்களப்பு.

தலைமை அஞ்சலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது.

# தமிழர் தலைவர்களுக்கு வன்னித் தரணியில் வரவேற்பு!

ஆங்கில ஏகாதிபத்தியத்தைஎதிர்த்துநின்றமாபெரும் விடுதலை வீரன் பண்டாரவன்னியனுக்குக் கற்சிலை மடுவிலும் நெடுங்கேணியிலும் விழா எடுத்துச் சுதந்திர தாகத்தை விடுதலை வேட்கையை எடுத்துக் காட்டினர் வன்னிநாட்டு வீரமக்கள்.

சென்ற ''அக்டோபர்,,31ம் நாள் பண்டார வன்னியன் நினைவுநாள் வழி நெடுகிலும் மகர தோரணங்களாலும் வரவேற்பு வளைவுகளாலும் நிறைந்து காணப்பட்டன.

ஒட்டுசுட்டானில்இயக்கத்தின் அமைப்புக் கூட்டம்—

முத்துஐயன் கட்டில் இளம் விவசாயிகள் நிறைந்த கருத்தரங்கு—

கற்சிலை மடு மகாவித்தியாலயத்தில் பண்டார வன்னியனுக்கு மாபெரும் விழா'—

நெடுங்கேணி மகாவித்தியாலத்திலும் அதே விடுதலை வீரனுக்கு பெரும் நினைவு விழா—

.அக்டோபர்31ம் நாள்காலை 11மணி முதல் இரவு 12மணி வரை அனைத்து நிகழ்ச்சிகளிலும தலைவா அமிா அவாகளும் துணைவியார் மங்கையறகரசியாருமகாலை10மணிகக்க வன்னிமாநிலம் வசனறிருந்தாாகள.

அவாகளை வரவேற்க மணிக்கணககில் மக்களும் மாணவரும் நிறைநது நினறனர்.

முல்லை பா.உ. செல்லத்தம்பு தலைமையில் ஒட்டுசுட்டானில் கூடிநினறமககள கூட்டம் தலைவர் அமிாைக் கணடதும தமிழீழ முதலவரே வருக,

தமிழினத்தின் நம்பிக்கைச் சுடரே வருக!

என வாழ்த்தி மாலைகள் அணிவித்து மலாதூவி வரவேறறனர்.

தலைவர் அமிர், சிவா, சம்பந்தன செலலததமபு, சிவசிதம்பரம் ஆகய ஆடசி மன்ற உறுப்பினர்களும் தருமதி மங்கையர்க்கரசி, மாவை சேனாதிராசா ஆகியோரும் கலந்து கொண்டு விழாவில் சிறப்புரை ஆற்றினர்.

இலங்கைத்தொழிலாளர் காங்கிரசின் வவுனியாவிலுள்ள மா நிலச் செயலகம் அகதிகளுக்கு வழங்குவதற்காக முருங்கைத்தடி, மரவள்ளித்தடி, வாழைக் குட்டிகள் ஆகிய தந்துதவும்படி எங்களைக் கேட்டுள்ளார்கள். ஆதலால் ஷ பொருட்களை வைத்திருக்கும் அன்பர்கள் எமக்குத் தந்துதவினல் நாம் இவற்றை இலவசமாக அகதிகளுக்கு வழங்கச் சித்தமாக இருக்கின்றோம்.எனவே ஷ பொருட்களையும் பனம் விதைகளையும் தமது தேவைக்கு மேலாக வைத்திருப்பவர்களை அகதிகளுக்கு வினியோகிப்பதற்காக எங்களிடம் ஒப்படைக்கும்படி அன்பாகக் கேட்கிறோம். நன்றி.

இங்ஙனம்
மில்க்வைற் அதிபர்.

றொமின், ஹறிலிஸ்ற் நீர் இறைக்கும்
இயந்திரங்கள், உதிரிப் பாகங்களின்
ஏகவிற்பனையாளர்கள்

**துர்க்கா ஓட்டோ காட்வெயர்ஸ்**

11, ஸ்ரான்லிறேட்
யாழ்ப்பாணம்.

## இராணுவத்தின்..

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காவும் போராடி வருகின்றோம் என்றார்.

அவர் மேலும் பேசுகையில்—

நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்புவதற்காகவே அரசியல் எதிரிகளின் குடியியல் உரிமைகளைப் பறிப்பதில் அரசு நாட்டம் கொண்டுள்ளது. இந்நிலையில் அரசியல் ஸ்திரம் எப்படி நிலவமுடியும்?

இந்த அரசின் பொருளாதாரக் கொள்கை முற்றிலும் தவறானது உலகவங்கி சர்வதேச நாணயச்சபை, சிங்கப்பூர் பொருளாதாரக் கொள்கையையே இவ்வரசு பின்பற்றுகின்றன்றது.

கடந்தமாதம் 28ம் திகதி அமைச்சர் ஒரு மதிப்பீட்டை வெளியிட்டார். ஆனல் புதியதொரு மதிப்பீட்டின்மீது வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளார். மதிப்பீடு தெரியாத நிலையில் விவாதத்தில் ஈடுபடுவது எப்படி என்று வினவிய எதிர்க்கட்சி முதல்வர் இந்த அரசு நிச்சயமாக மேற்கை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது என்றார்.

## சுவரின்றிச் சித்...

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபையிலிருந் தோரிடையே ஒருமறுமலர்ச்சிக்கானமகிழ்ச்சி இழையோடியதுஎல்லோர்வாயிலுமதேனூட்டுககவிஞரினபெருவிளக்கம் தேனாய் இனித்தது.

தகவல்— நாக-சாந்தலிங்கம்
புங்குடுதிவு,

## தமிழீழப் பிரகட..

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

புக்குழுவின் ஒரு அங்கமாகிய ஈழவிடுதலை இயக்கம் தனது நிலையைத் தெளிவுபடுத்தி ஈழத்தமிழினத்திற்கு உண்மையை எடுத்துக்காட்ட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது,

தமிழீழ அரசுப் பிரகடனம் பற்றி எமது இயக்கப் பொதுச் சபை விவாதித்து கீழ்க்கண்ட அறிக்கையை பத்திரிகைகளுக்கு வெளியிடத் தீர்மானித்துள்ளது.

லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் உலகத் தமிழினத்தின் ஒன்றுபட்ட அபிலாசையைப் பிரதிபலிப்பதாக கூறி இப்பிரகடனத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. உண்மையில் உலகத் தமிழரோ அல்லது லண்டன் தமிழரோ அல்லது ஒருங்கிணைப்புக்குழு ஒன்றுபட்டோ இந்தப் பிரகடன ஆணையை திரு. வைகுந்தவாசனுக்கு வழங்கவில்லை இதுதனிநபர்களின்அனுசரணையுடன் ஆமோதிக்கப்பட்ட ஒரு தனி நபர் பிரகடனமாகும். தமிழர் ஒருங்கிணைப்புக்குழு அமைப்பின் ஒரு அங்கமாகிய எமது இயக்கம் இப்பிரகடனத்திற்கு எவ்வித ஆதரவும் அளிக்கவில்லை. ஆகவே— இது தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏகோபித்த தீர்மானம் என்று கொள்ள முடியாது.

திரு. வைகுந்தவாசனின் தமிழீழப் பற்றை மெச்சும் அதே வேளையில் தனிநபர்களின் கற்பனாவாதத்தில்உதிக்கும்அறிக்கைகளாலோபிரகடனங்களினாலோ தமிழீழம்தனியரசாக உதயமாகப் போவதில்லைஎன்பதைஎடுத்துரைக்க விரும்புகின்றோம், உருப்படியான செயலுள்ள திட்டங்கள் எதுவுமின்றி மந்திரத்தால் மாங்காய் விழுத்த எண்ணும் அசட்டுத்தனமான அரசியல் கற்பனாவாதம் இது.

தமிழீழப் பிரகடனம் 1976ம ஆண்டு செய்யப்பட்டது. 1977ல் அதற்கு மக்கள் ஆணையும் வழங்கப்பட்டது இதற்கப்புறம் இன்னுமொரு புதிய பிரகடனம செய்யப்படுகின்றது. அதாவது82ம்ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று தமிழீழம பிறந்து விடுமென்று இந்த அரசியல் அதிசயம் எப்படி நிகழ்ந்துவிடும் என்பது எவருக்குமே புரியவில்லை. எட்டாத தூரத்தில் இருக்கும் சந்திரனை கண்ணாடியில் பிடித்துக் காட்ட விழையும் நிறைவாத அரசியல் இது. பேச்சிலும் எழுத்திலுமாக பிரகடனங்களை வெளியிட்டாற்போல் வானத்தின் சூன்யத்திலிருந்து தமிழீழம் உதிக்கப் போவதில்லை.

சொற்களில் வரித்த பிரகடனங்களை செயலில் ஆக்க முடியாத எந்தவொரு அரசியல் சக்தியாலும் தமிழீழத்தைப் பிறப்பிக்க முடியாது

ஒரு தேசிய இனத்தின்விடுதலைப்போராட்டம்என்பது மிகவும் பிரமாண்டமான ஒரு கைங்கரியம் ஒரு புரட்சிகரமான கொள்கைத் திட்டத்தையுடைய ஒரு புரட்சிகர இயக்கத்தால்தான் இந்தமாபெரும் சாதனையைச் சாதிக்க முடியும்.

எங்களிடம் எல்லாவிதமான பலசரக்குச் சாமான்கள் விற்பனைக்குண்டு
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

**திருமுருகன்**

களஞ்சியம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**சாந்தி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, மாலை 6-30, 9-30

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க கடைசி சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்

கமலஹாசன், ஸ்ரீபிரியா, விஜயகுமார், மஞ்சுளா, ரவிச்சந்திரன், லதா, முத்துராமன், தீபா, எம். என். நம்பியார், ஜெய்கணேஷ், ஸ்ரீகாந்த் சுருளிராஜன் நடித்த

**நீயா?**

(வண்ணப் படம்)

(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, மாலை 6-30 9-30

8 – வது வாரமாக
வெற்றி நடை போடுகிறான்......

ஜெய்சங்கர், ஜெயசித்ரா, ரோஜாரமணி, அசோகன், எம் ஆர். ராதா, எஸ். பி. சுப்பையா, பண்டரிபாய் நடித்த

அறிஞர் அண்ணாவின்

**வண்டிக்காரன் மகன்**

(ஈஸ்ட்மன் கலர்)

திரைக் கதை வசனம் கலைஞர் — மு. கருணாநிதி

உதய சூரியன் வெளியீட்டகத்தால்நல்லூர் சண்முகா பதிப்பகத்தில் 14-11-80 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.